ரபாத் உச்சிமாநாட்டின் மூலம்பயனேதுமேஇல்லை அதிபர்நாஸர்கவலை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண் 49

போன்: 389

மலா 11

இதழ்: 315

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 10 ஷவ்வால் 15 வியாழக்கிழமை [25-12-69]

எல்லோருக்கும் எமது

நத்தார்-புத்தாண்டு வாழ்த்துகள்



புத்துணர்ச்சிக்கும் உற்சாகத்துக்கும் பாவியுங்கள்

அண்ணா கோப்பி

அண்ணா இன்டஸ்றி

இணுவில் தெற்கு — இணுவில்

எல்லோர்க்கும் எமது

நத்தார் வாழ்த்துக்கள் !

பூரண திருப்தி அளிப்பது

பி. வி. எம்.

ஒறென்ஜ் பீடி

தயாரிப்பாளர்கள்:

பி. வி. எம்.

ஒறென்ஜ் பீடி கம்பனி

நவாலி ரேட், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

## ரபாத் உச்சிமாநாட்டின் மூலம்பயனேதுமேஇல்லை அதிபர்நாஸர்கவலை

கெய்ரோ, டிச. 24

ரபாத்தில் நடைபெற்ற அரபுத் தலைவர்களின் உச்சி மாநாடு பயனுள்ள எதையுமே சாதிக்கத்தவறிவிட்டது என்று ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அப்துல் நாஸர் கூறியிருப்பதாக அல் அஹ்ரம் பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

நம்பிக்கையளிக்கும் வகையில் எதையும் செய்யாமல் அரபுத் தலைவர்களின் மாநாடு தோல்வியடைந்துவிட்டதாக நாஸர் கூறியிருப்பதாகத் தெரிகின்றது.

இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகளின் சக்திகளை ஒரு முகப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசிப்பதற்காக அரபுத்தலைவர்கள் மொராக்கோ தலைநகரில் கூடிப் பேசினார்கள். மாநாடு தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்காமலே முடிவடைந்தது. இறுதிக் கூட்டத்தில் சிரியா, ஈராக், ஜேமன் போன்ற நாடுகள் கலந்து கொள்ளவில்லை.

மாநாடு வெற்றி பெறுவதற்கு பயனுள்ளவகையில் ஒத்துழைக்க சில நாடுகள் தவறியதால் தமது நாடு ஒதுங்கியிருக்க நேர்ந்தது என்று சிரியா அயல்நாட்டு மந்திரி பத்திரிகை நிருபர்களிடம் பின்னர் தெரிவித்தார். மாநாட்டின் முதலில் அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

கொள்கை வேறுபாடு காரணமாக சிரியா, ஈராக், ஜேமன் போன்ற நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லையென்று மொராக்கோ மன்னர் ஹஸன் நிருபர்களிடம் கூறினார்.

அனைவருக்கும் எமது

நன்றிகலந்த

நத்தார் வாழ்த்துக்கள்

## "மூன்றாவது அவசியம்தானா?

# கலாச்சார பல்கலைக்கழகமல்ல; 'பொது' பற்றித்தான் ஆராயப்படும்"

### டாக்டர் மலலசேகரா தெரிவித்ததாக தகவல்

— நமது நிருபர் எஸ், நவரத்தினம் —

திருக்கோணமலை, புதன்

"எந்தவிதமான அடிப்படை அரசியல் காரணங்களைக் கொண்டும் தமிழ் பல்கலைக்கழகமோ அல்லது சிங்கள, இந்து, முஸ்லிம் பல்கலைக்கழகமோ வடமாகாணத்திலோ அல்லது கிழக்கு மாகாணத்திலோ அரசாங்கம் நிறுவப்போவது இல்லை. நிறுவப்படவும் மாட்டாது. அதற்கு நமது நாட்டுக் கல்வித் திட்டத்திலும் இடமில்லை" என்று திருமலையில் [illegible] அகில இலங்கை [illegible] கரங்கிரஸின் 51-வது மகாநாட்டில் கலந்துகொள்ள [illegible] 51-வது பௌத்தகாங்கிரஸ் மகாநாட்டில் திரு. பி. நேமிநாதன் வரவேற்பிதழ் வாசித்தார். அப்போது தன்னுடன் டாக்டர் மலலசேகரா கலந்துரையாடினாரென்றும், சில தகவல்களை வெளியிட்டாரென்றும் தெரிவித்தார்.

டாக்டர் மலலசேகரா பின் வருமாறு தன்னிடம் தெரிவித்ததாக திரு. நேமிநாதன் தெரிவித்தார்.

தேசிய உயர் கல்விச்சபை [illegible]தே இலங்கை[illegible] 3-வது பல்கலைக்கழகமொன்று தேவை தானா? அது எப்படிப்பட்ட[illegible] சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென ஆராய்ந்த பின்பே அதை வடக்கில் நிறுவுவதா? கிழக்கில் நிறுவுவதா? எனத் தீர்மானிக்கப்படும்.

எந்தவிதமான அடிப்படைக் காரணங்களைக் கொண்டும் தமிழ், சிங்கள, இந்து, முஸ்லிம் பல்கலைக்கழகம் நிறுவப்படமாட்டாது. 3-வது பல்கலைக்கழகம் நிறுவ தேசிய உயர் கல்விச்சபை தீர்மானித்தால் அது நிச்சயமாக பல சமூகத்தவரும் கல்வி பயிலக் கூடிய ஒரு பொதுப் பல்கலைக்கழகமாகத் தான் நிறு[illegible]

பல்கலைக் கழக விஷயம்

## ரோயல் கமிஷனிடம் விடப்பட வேண்டும்

### யாழ். பெற்றோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

வடக்கில் அல்லது கிழக்கில் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமான விசாரணை ரோயல் கமிஷனிடம் விடப்படவேண்டுமென யாழ். பெற்றோர் சங்கம் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது.

ரோயல் கமிஷனிடமிருந்த இந்தப் பொறுப்பை தேசிய உயர்கல்விச் சபையிடம் ஒப்படைத்ததற்கு யாழ். பெற்றோர் சங்கம் தனது பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது.

யாழ். பெற்றோர் சங்கக் காரியதரிசி வழக்கறிஞர் எஸ். பொன்னையா சங்கத்தின் சார்பில் கல்வி மந்திரிக்கு கோரிக்கையை அனுப்பிவைத்துள்ளார்

## "எழுத்தாளர்களுக்கு அரசு உதவ வேண்டும்"

கிரிக்கட்

## ஆஸ். 162-4

சென்னை, டிச. 24

ஆஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்குமிடையில் சென்னையில் நடைபெறும் 5-வது கிரிக்கட் டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளான இன்று பிற்பகல் தேநீர் இடைவேளையின் போது, ஆஸ்திரேலியாக் கோஷ்டி 4 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இக்கோஷ்டி 4 விக்கெட்டுகளையும் இழக்கும்போது ஆக 82 ஓட்டங்களைமட்டுமே பெற்றிருந்தது அதன்பின் துடுப்பெடுத்தாடியவோல்டரும், றெட்பாத்தும் ஆட்டமிழக்காது குறையே 48, 31 ஓட்டங்களை எடுத்து 162 ஆக உயர்த்தி விட்டனர். ஆட்டமிழந்த ஆட்டக்காரர்களின் விபரம்: லோரே-33, சக்போல்-37, சப்பின் -04,

## திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவக் கோரிக்கை

திருகோணமலை, புதன்

திருமலையில் பூரணத்துவம் வாய்ந்தஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் எனக்கோரி அண்மையில் தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி.பி.மலலசேகராவுக்கு திருமலை பல்கலைக்கழக இயக்கம் மகஜர் ஒன்று அனுப்பி இருக்கின்றது.

வழக்கறிஞர் ஒ.எஸ்.எம். இஸ்மாயில் அவர்களைத் தலைவராகவும் முகாந்திரம் சி. முத்துக்குமாரு அவர்களைச் செயலாளராகவும், மற்றும், பல அங்கத்தவர்களைக் கொண்ட திருமலைப் பல்கலைக்கழக இயக்கம் தேசிய உயர்கல்விச்சபைக்கு சமர்ப்பித்த மகஜரில் திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவவேண்டிய அத்தியாவசியத்தையும், காரணங்களையும் ஆராய்ந்து குறிப்பிட்டிருக்கின்றது அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கொழும்பு பேராதனை ஆகிய இடங்களில் இருக்கும் பல்கலைக்கழகங்கள் போல் உலகில் பிரசித்தி பெற்ற [illegible] வழிகளினால் போக்குவரத்து வசதிகள் நிறைந்திருக்கின்றது.

மாவிட்டபுரம், புதன்

"தமிழ்மக்கள் வதியும் பிரதேசத்துக்கு திருமலை மத்திய இடமாக விளங்குவதால் திருமலையில்தான் பல்கலைக்கழகம் அமைய வேண்டும்" என்று பல்கலைக் கழக கமிஷனுக்கு நேரில் சாட்சியமளிக்க ஆணைக் குழு செயலாளருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்பேசும் இனத்தின் வருங்கால நன்மையை உத்தேசித்து திருகோணமலையில் ஒரு தமிழ் பல்கலைக்கழகம் நிறுவுவது சாலச் சிறந்தது. அதற்குரிய காரணங்களாவன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்ற பாகுபாட்டை நீக்குவது.

முக்கியமாக மூன்று மதங்களை உள்ளடக்கிய

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தப் பொறுப்பை தேசிய ... அனுப்பிவைத்துள்ளார்

# "எழுத்தாளர்களுக்கு அரசு உதவ வேண்டும்"

## நூல் வெளியீட்டுவிழாவில் பண்டிதர் இரத்தினம்

யாழ்ப்பாணம், வியா

"அரசாங்கம் புதிய எழுத்தாளர்களுக்கும் அவர்களது புத்தக வெளியீடுகளுக்கும் உதவி செய்ய வேண்டியது அவசியமாகும். தேவையில்லாத முறைகளில் பணத்தை செலவிடும் அரசு இவற்றிற்குதவிசெய்யாதது மிகவும் கவலைக்குரியது. இதுபற்றி நாம்பல தடவைவற்புறுத்தியும் பிரயோசனமில்லை. கலாசாரப்பணியை வளர்க்கவுள்ள இலங்கைகலாசாரத் திணைக்களத்தில் ஒரு தமிழரும் இல்லை. இப்படியான நிலையில் எங்ஙனம் தமிழ்க் கலாச்சாரத்தை அரசாங்கம் வளர்க்க முடியும் இந்தநிலையை மாற்றியமைக்கும்படி ஒவ்வொருதரும் வற்புறுத்த வேண்டும்."

இவ்வாறு கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பணடிதர் கா. பொ. இரத்தினம் கவிஞர் தில்லைச்சிவனின் 'தாய்க்கவிதை" நூல் வெளியீட்டுவிழாவுக்கு தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் இவ்வெளியீட் விழா நடைபெற்றது.

அவர்தொடர்ந்து பேசுகையில் மொழி, இனம் பெயர் முதலியவற்றைமாற்றியமைக்கலாம். ஆனால் தாய்நாட்டை மாற்றியமைக்க முடியாது. இது தில்லைச்சிவனின் கவிதையில் மிளிருவதைக் காணலாம் சகல அறிஞர்களிலும் சிறந்தவர்களாக கவிஞர்களையே உலகம் மதிக்கறது, இதற்குக் காரணம் கவிக்கு நாட்டிலுள்ள மதிப்பே என்றார்.

புத்தகத்தின் முதற் பிரதியை நாரந்தனைக் கி. ச. தலைவர் திரு. த. சண்முகலிங்கம்பெற்றுக் கொண்டார்.

கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை பேசுகையில் பாரதிதாசனின் பாடல்களை மேற்கோள் காட்டுவதுபோல் தில்லைச்சிவனின் பாடல்களையும் மேற்கோள் காட்டிப் பேசவேண்டும்" என்றார். இரசிகமணி கனகசெந்திநாதன் வெளியீட்டுரை நிகழ்த்தினார், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பாராட்டுரை வழங்கினார். (ஊ. நி,

...பாத்தும் ஆட்டமிழக்காது குறையே 48, 31 ஓட்டங்களை எடுத்து 162 ஆக உயர்த்தி விட்டனர். ஆட்டமிழந்த ஆட்டக்காரர்களின் விபரம்: லோரே-33, சக்போல்-37, சப்பின்-04, ஸகான்-01. இந்திய பந்து வீச்சு வீரர் பிறஸ்ஸன்ன-3 விக்கெட்டுகளையும், வெங்கடராகவன் 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## தீவுப்பகுதி பஸ்கட்டணம்

ஊரதீவு, புதன்

தீவுப்பகுதி பஸ் கட்டணத்தைக் குறைக்கும்படி ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தினராலும் மற்றும் பல பொது ஸ்தாபனங்களாலும் தேசியமய சேவை அமைச்சரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

வடமாநில இ. போ. ச. முகாமையாளர் இதுபற்றி அனுப்பிவைத்துள்ள பதிலில் பஸ் கட்டணத்தை இப்போதைக்கு குறைக்க முடியாதெனவும், இதுபற்றிப் பின்னர் ஆலோசிக்கப் படுமெனவும் இளந்தமிழர் மன்றச் செயலாளர் ந. இராசதுரைக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு வியா

இன்று வடக்கு மாகாணத்தில் மழையுடன் கூடிய புயல் வீசலாமென கொழும்பு அவதான நிலையம் றிவித்துள்ளது.

மீனவாகள் இனறு கடலுக்கு தொழில் புரிவதற்காகசெல்ல வேண்டாமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லண்டன் டிச. 24

இந்து சமுத்திரத்தின் தென்மேற்கு பிராந்தியத்திலுள்ள அல்டப்ரா என்ற சிறியதீவொன்றின் ஆராய்ச்சியை மேற்கொள்ளவிருக்கிறார் ஒரு பிரிட்டிஷ் பெண் விஞ்ஞானியான டாக்டர் மேரி பில்ஹாம். இவர் தென் வேல்ஸ் சர்வகலாசாலையின் உயிரியல் பேராசிரியராக கடமையாற்றுகிறார். இந்த இந்துசமுத்திரதீவில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் முதல்பெண்மணி இவரென்பது குறிப்பிடத்தக்கது.

மெரட்டுவ நகரசபைத் தேர்தலில் கூட்டணிக்கு 6 இடங்களும் யு என். பிக்கு 3 இடங்களும், சுயேட்சைக்கு 6 இடங்களும் கிடைத்திருக்கின்றன.

# அடுத்தாண்டு பாடப் புத்தகங்கள் தாமதிக்கும்?

பருத்தித்துறை, வியா

அடுத்தாண்டு சிலவகுப்புக்கான பாடப்புத்தகங்கள் இன்னும் வெளிவரவில்லையெனத் தெரிகிறது. முககியமாக 8ம் வகுப்புக்கும் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புக்களுக்கும் வரலாறு புவியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கான திணைக்களவெளியீடுகள் இதுவரை வெளிவராமையால் பெற்றோரும் ஆசிரியரும் அதிக இடர்ப்படுவதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டும் சில பாடங்கள் புத்தகங்களின் உதவியில்லாமலே பல ஆசிரியர் இப்படியான பாடங்களைக் கற்பிக்க வேண்டியிருந்ததாம். க. பொ. த. (சாதாரண) வகுப்பிற்குரிய சமய பாடத்திற்கும் திணைக்களப் பாடப்புத்தகம் விரைவில் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகளும் காணப்படவில்லை.

## உள்ளூராட்சி தேர்தல்முடிவுகள்

கோட்டை, புதன்

நாவலப்பிட்டி நகரசபை தேர்தலில் 8 வட்டாரங்களில் 5 யு என். பிக்கும் கூட்டணிக்கு ஒரு ஸ்தானமும், சுயேட்சைக்கு ஒரு ஸ்தானமும் கிடைத்தது.

தெஹிகம்பல்பற்று கிராம சபைத் தேர்தலிலும் யு, என். பி அமோகவெற்றியீட்டியுள்ளது யு. என்பிக்கு 17 ஸ்தானங்களிலும் லங்கா சமசமாஜக்கட்சி 11 ஸ்தானங்களிலும் வெற்றுபெற்றுள்ளது.

கொலன்னாவை நகரசபைத்தேர்தலில் கூட்டணி 7 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. யு. என். பிக்கு 2 இடமும், சுயேட்சைக்கு 2 இடமும் கிடைத்துள்ளன.

...து இல்லை. நிறுவப்படவும் மாட்டாது. அதற்கு நமது நாட்டுக் கல்வித் திட்டத்திலும் இடமில்லை" என்று திருமலையில் நடைபெற்ற அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸின் 51-வது மகாநாட்டில் கலந்துகொள்ள வந்த தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா தன்னிடம் தெரிவித்ததாக திருமலை நகரசபையின் 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. நேமிநாதன் நமது நிருபரிடம் கூறினார்.

திருமலையில் நடைபெற்ற பின் வருமாறு தன்னிடம் தெரிவித்ததாக திரு. நேமிநாதன் தெரிவித்தார்.

தேசிய உயர் கல்விச்சபை நியமிக்கப்பட்டதே இலங்கைக்கு 3-வது பல்கலைக்கழகமொன்று தேவைதானா? அது எப்படிப்பட்ட அம்சங்களைக் கொண்டதாக அமையவேண்டும் என ஆராய்வதற்கே இதுவிடயமாக தேசிய உயர் கல்விச் சபை ஆராய்ந்து வருகிறது. இலங்கைக்கு 3-வது பல்கலைக்கழகமொன்று தேவை என அவசியம் ஏற்பட்டால் அது எப்படிப்பட்ட அம்சமாக ... கழகம் நிறுவப்படமாட்டாது. 3-வது பல்கலைக்கழகம் நிறுவ தேசிய உயர் கல்விச்சபை தீர்மானித்தால் அது நிச்சயமாக பல சமூகத்தவரும் கல்வி பயிலக்கூடிய ஒரு பொதுப் பல்கலைக்கழகமாகத் தான் நிறுவப்படும்.

"விரைவில் தாம் வடகிழக்கு மாகாணங்களுக்குச் சென்று நில கட்டிட வசதிகளைப் பார்வையிட்டு பொதுமக்களுடைய அபிப்பிராயங்களையும் கோரப் போவதாக டாக்டர் மலலசேகரா தெரிவித்தார்.

...குறிப்பிட்டிருக்கின்றது அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கொழும்பு பேராதனை ஆகிய இடங்களில் இருக்கும் பல்கலைக்கழகங்கள் போல் உலகில் பிரசித்தி பெற்ற திருமலையில் 3-வது பல்கலைக்கழகமாக பூரணத்துவம் வாய்ந்த ஒருதமிழ் பல்கலைக்கழகம் நிறுவுவது மிகவும் பொருத்தமானதும், இலங்கைக்கு பெருமைதேடித்தருவதுமாகும்.

கிழக்கு மாகாணத்தில் கல்வி பின்தங்கிய நிலையில் இருப்பதுடன் அதிலும் திருகோணமலையில் கல்வி மோசமான நிலையில் இருக்கின்றது. பொருளாதாரத்திலும் திருமலை பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. எனவே இங்கு நிறுவவேண்டியது அவசியம்.

இயற்கையிலேயே விவேகமும் அறிவும் நிறைந்தமாணவர்கள் இருந்த போதும் பொருளாதாரக் கஸ்டத்தாலும், விடுதி வசதியின்மையாலும், கொழும்பு, பேராதனை ஆகிய இடங்களுக்குச் சென்று கல்வி கற்கமுடியாது கஸ்டப்படுகின்றார்கள்.

பல்கலைக்கழகம் நிறுவுவதற்கேற்றவேறு இடங்கள் இருந்தாலும் திருமலையில் கட்டிட நில வசதிகள் இருப்பதுடன் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை, பெரிப்பிக்கவும், உயர்வடையச் செய்யவும் போதிய வசதிகள் இங்கு உண்டு.

பெரும்பான்மைத் தமிழ் பேசும்மக்கள் வாழும் பிரதேசத்துக்கு மத்தியில் இருக்கும் திருமலை பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு ஏற்ற இடமாகும். தரை, ஆகாய, கடல் ... கழகம் நிறுவுவது சாலச் சிறந்தது. அதற்குரிய காரணங்களாவன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்ற பாகுபாட்டை நீக்குவது.

முக்கியமாக மூன்று மதங்களை உள்ளடக்கிய தமிழ்பேசும் மக்களுடைய மத சுதந்திரத்தை பாதிக்காது மும்மதங்களினுடைய கலாச்சாரங்களை பாதுகாப்பது.

தமிழ்பேசும்மக்கள் வதியும் பிரதேசத்திற்கு திருகோணமலை மத்திய இடமாக விளங்குவது.

இந்து பல்கலைக்கழகம்என அமையுமானல் இந்து, இஸ்லாமிய கிறிஸ்தவ மக்களை பிரித்து ஒவ்வொரு மதத்தினர்க்கும் மத அடிப்படையில் தனித்தனி மூன்று பல்கலைக்கழகம்அமைய வழி வகுப்பதை தடுப்பது.

# "தமிழர் விஷயத்தில் பௌத்த காங்கிரஸ் உதவவேண்டும்"

## மகாநாட்டில் கோரிக்கை

திருகோணமலை, புதன்

"கோணேஸ்வரத்தைப் புனிதநகராக்குவதற்கும்தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கும், தமிழர்களுடைய பாரம் பரியமான உரிமைகளைக்காப்பாற்றுவதற்கும், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் சபையினர். பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும்."

திருமலையில் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 51-வது மாநாட்டில் சர்வதேச மகாசபையின் திருமலைக்கிளை அளித்த வரவேற்பு வைபவத்தில் திருமலை நகரசபை அங்கத்தவரும் வழக்கறிஞருமான பா. நேமிநாதன் தமது வரவேற்பு இதழில் மேற்கண்டவற்றை வாததார்.

அவர்தொடர்ந்துவரவேற்பிதழைப்படித்த போது குறிப்பிட்டதாவது:-

திருமலையில் அகில இலங்கை பௌத்தகாங்கிரஸின் 51-வது மகாநாட்டை கூட்டப்போகின்றோம் என அறிவித்தபோதுநாம் இந்த மகாநாட்டை எதிர்ப்பதற்கும் எண்ணினோம். என்ன காரணத்தைக்கொண்டு 51-வது மாநாட்டைக்கூட்ட திருமலையைத்தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள் என்று தமிழர்களினடையே ஒருவித பயமும் பீதியும் எழுந்த ஆனல் பௌத்த மக்கள் இங்குள்ள பெரியோர்களையும், தலைவர்களையும் அழைத்து அவர்களிடம் அபிப்பிராயமும் சம்மதமும் பெற்று இம் மகாநாட்டை நடத்த முன் வந்த படியால் நாம் ஓரளவு நிம்மதி கொண்டிருக்கின்றோம். இம்மாநாடு ஏன் திருமலையில் கூட்டப்பட்டது. என்பதற்கு பௌத்தர்கள் காரணம் கூறி திருமலை மக்களுடைய பயத்தையும் பீதியையும் போக்கவேண்டும் எனக்கேட்டுக்கொள்கின்றேன்.

அத்தோடு இந்துக்களுடைய புனித ஸ்தலமான கோணேஸ்வரத்தை புனித நகராகப் பிரகடனப்படுத்த பௌத்த காங்கிரஸினர் ஒத்துழைப்புத்தரவேண்டும்தமிழர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்நிறுவுவதற்கும் அவர்கள் பூரணமான ஒத்துழைப்புத் தரவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர்டாக்டர் ஜி. பி. மல்லசேகரா பேசுகையில் கூறியதாவது:-

பௌத்த காங்கிரஸ் இந்த இரண்டு விடயங்களையும் ஆராய்ந்து தக்கதருணத்தில் நியாயமான அபிப்பிராயம் தெரிவிக்கும். இங்கு இரண்டு நாம் கூடி இருப்பது இது போன்றவிடயங்களை ஆராய்வதற்கல்ல. நாம் எப்படி நல்லபௌத்தர்களாக இருக்கலாம் நல்ல பௌத்தர்களாக வாழ தடையாக இருக்கும். காரணங்கள் என்ன என்பதை ஆராய்வதற்கே நாம் கூடி இருக்கிறோம்

திருகோணமலையை நாம 51-வது பௌத்த காங்கிரஸ் மகாநாட்டைக்கொண்டாட தெரிவுசெய்ததையிட்டு யாரும்வீணுகக்கவலைப்படத் தேவையில்லை பௌத்த காங்கிரஸின் கிளை நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அக்கிளைகளின் அழைப்பின் பேரில் சென்று அங்கு மகாநாடு கூடுவது நமது மரபு. திருமலைக்கிளையின் வேண்டுகோளின் பேரில் நாம் இங்கு கூடியிருக்கின்றோம்.

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகர சபை சிறுவர் பூங்கா நாளை வெள்ளிக்கிழமைதிறந்துவைக்கப்படவிருக்கிறது. யாழ். நகர முதல்வர் திரு. நாகராசா பூங்காவைத்திறந்து வைப்பார்.

திருக்குடும்ப கன்னியார் மடம், வேம்படி மகளிர் கல்லூரி, புனித திரேசா பாடசாலை மாணவிகளின் வாத்திய இசை விழாவில் இடம் பெறும். பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு சிற்றுண்டி விருந்தும் அளிக்கப்படும்.

## தள்ளுபடியானவழக்கு மீண்டும் தள்ளுபடி

மாவிட்டபுரம் புதன்

தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட்ட வழக்கு ஒன்றை மல்லாகம் மாஜிஸ்திரேட் நேற்று தள்ளுபடி செய்தார்.

மாவை ஆலயத்தில் 1967-ம் ஆண்டு உற்சவத்தின் போது ஆலயத்தில் பிரவேசிக்க முயன்ற சிறுபான்மையினரைத் தடுத்ததா குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கை காங்கேசன் துறை பொலிசார் தாக்கல்செய்திருந்தனர்.

இவ்வழக்கை விசாரணை நடத்திய மல்லாகம் நீதிபதி இருதவணைகட்கு வழக்காளி தரப்பு சாட்சிகள் சமூகமளிக்காததால் வழக்கை தள்ளுபடி செய்திருந்தார்.

வழக்காளி தரப்பு சாட்சிகள் வராத காரணத்தை காட்ட மீண்டும் வழக்கை பொலிசார் புதுப்பித்தனர்.

இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு எந்தக் காரணம் கொண்டும் புதுப்பிக்க முடியாது என வாதாடினர்.

இதையடுத்து மாஜிஸ்திரேட் எஸ். ஆனந்தகுமாரசாமி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் தொடர சட்டம் இடம் கொடுக்காது என கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்.

எதிரி தரப்பில் திரு வி. சுந்தரலிங்கம், திரு தம்பிரத்தினம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்

## மகாராணி செய்தி

லண்டன், டிச, 42

ஏழைகளுக்கும் வயோதிபர்களுக் உதவவேண்டுமென்று பிரிட்டிஷ் மகாராணி தமது நத்தார்தினச் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1960 முதல் 70-ம் ஆண்டு வரையான வருடங்கள் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றமான வருடங்கள் என்றும் சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்தகாலம் இது என்றும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

## டாக்ஸி சாரதி மரணம்

யாழ்ப்பாணம், வியா

டாக்ஸி சாரதி ஒருவரின் மரணம்சம்பந்தமாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றார்கள்.

இந்த டாக்ஸியின் சொந்தக்காரர் ஆனைக்கோட்டையை சேர்ந்தவரென்றும் சிறுவன் ஒருவன் கொடுத்த தகவலைத்தொடர்ந்துபொலிசார் புலன் விசாரணை செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

## காணவில்லை

யாழ்ப்பாணம், வியா.

நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த திரு. வெ. சேனுதிராசா என்பவர் நேற்றுக்காலைமுதல் காணவில்லையென பொலிஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் ஒரு பென்ஷனியர் எனவும் பென்ஷன் எடுக்க கச்சேரிக்கு சென்றவர் பின் வீடு திரும்பவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. சேனுதிராசா ஞாபக மறதிக்குணமுடையவர் எனவும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

முகாமையாளர்:

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்பவர் 20—50 வயதுக்குட்பட்டவராகவும் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராகவும் (கூட்டுறவுப் பயிற்சியுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்). பிணை உரொக்கம் ரூ. 1000/- ஆதனம் ரூ. 2000/- செலுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் மாதம் ரூ. 70/- எல்லாமுட்பட. விண்ணப்பங்களில் சொத்து விபரங்களைக் குறிப்பிட்டு 10-1-70க்கு முன்னர் பதிவுத் தபால்மூலம் சு. சுந்தரம்பிள்ளை, செயலாளர், வடகிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சுழிபுரம் என்ற முகவரிக்கு அனுப்புதல்வேண்டும். 1728

### விற்பனைக்கு

2 கிழமையில் முட்டை இடக்கூடிய 50 நல்ல இனக் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. 800/-க்கு கிட்டிய விலையில் கிடைக்கும். ந. செல்வலிங்கம், நம் 6, ஒடைலேன். 1619

### அரசாங்க கேள்விகள்

கட்டிடங்கள் திணைக்களம்

என். 536- யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கக் கட்டிட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் 1970ம் ஆண்டில் செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் (தொகுதிகள் 'ஏ', 'பீ', 'சீ', 'டீ' ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள்) கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 21-1-1970. மேலதிக விபரங்கட்கு 19-12-1969 அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

GP 821

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கச்சேரிக்கு அருகாமையில் 'போறெஸ்ட்' (Forest) கிழக்கொழுங்கையில் 18/2 இலக்கத்திலுள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிசகற்ற உறுதி. விலையைக் குறிப்பிட்டு தொடர்புகொள்ளவும். க. சம்பந்தபிள்ளை, 356, யூனியன் பிளேஸ், தபால்பெட்டி 1367, கொழும்பு-2.

1729

## யாழ்ப்பாண மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்
# சந்தைக் குத்தகைகள்-1970

1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை கீழ்க்காணும் சந்தைக்கான கேள்விகள், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 28 12-69ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்குமுத்திரை இடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும் கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படவேண்டும் அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் போடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 27-12-69ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதன்பேரில் வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள். | கேள்விப்பத்திரத்தின் விலை. | கேள்விப்பத்திரங்களைப்பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டியபொறுப்புப் பணம். | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிசின் உறுதிக்காகச்செலுத்தப்படவேண்டிய பணம். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| பெரியகடை மீன் சந்தையும் மீன்சந்தையில் கடதாசி விற்பதற்கான உரிமையும். | 10-00 | 250-00 | 250-00 |

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 22-12-69. 1464

## உடைத்துத் திருட்டு

ஊரதீவு, புதன்

ஊரதீவு - பாணாவிடைச்சியின் ஆலயத்தில் மீண்டும் உண்டியல் உடைத்துத் திருடப்பட்டுள்ளது

முன்பு கருப்பக்கிரக ஆலயத்திற்குள் திருடப்பட்டது இப்போது ஐயனார் முன் கோயில் உண்டியல் உடைத்துத் திருடப்பட்டுள்ளது

## தளங்களைநீக்கிக்கொள்ள இணக்கம்

நியூயோர்க்,டிச.24

லிபியாவில் உள்ள அமெரிக்க ராணுவத்தளங்களை அடுத்த ஜூன் 30ம் திகதியளவில் விலக்கிக் கொள்வதற்கு அமெரிக்காவுக்கும் லிபியாவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று நேற்றிரவு கைச்சாத்திடப்பட்டது.

லிபியாவிலுள்ள பிரிட்டிஷ் தளங்களை நீக்கிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த வாரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இப்பொழுது அமெரிக்காவுக்கும் லிபியாவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

## சமய விழா

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டை மூன்ரும் பனை வைரவர் கோயில் முன்றலில் இன்று வியாழக் கிழமை மாலை சமய விழா நடைபெறுகின்றது. காஞ்சீபுரம் மெய்கண்டார் ஆதீன குருமகாசன்னிதானம் அறிவுரை வழங்குவார். அம்பா சமுத்திரம்பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் (சுகப் பிரம்மம்) 'நால்வர் காட்டிய நன்னெறி' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 25—12—69**

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-10 நத்தார்நற்சிந்தனை, 7-30 திரைகானம் 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 கிறிஸ்தவகீதம், 9-00 செய்திச்சுருக்கம், 9-03 கிறிஸ்தவநிகழ்ச்சி அஞ்சல், 10-00 செய்திச்சுருக்கம், 10-03 கிறிஸ்தவநிகழ்ச்சி, 11-00 செய்திச்சுருக்கம், 11-03 நாதஸ்வரம், 11-45 மெல்லிசை.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 புல்லாங்குழல், 7-35 பேச்சு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நத்தார்ஆசிச்செய்தி, 10-15 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

பிரிட்டனில்

## 'புளூ'வுக்கு 300 பேர் பலி

லண்டன்,டிச.24

பிரிட்டனில் 'இன்ஃபுளூவென்சா' சளிச்சுரத்துக்கு 300 பேருக்கு மேல் பலியாகியிருக்கிருர்கள்.

கடந்தவாரம் இந்த நோய்க்கு பலியானவர்களை விட இது அதிகமென்று கூறப்பட்டது. ஜேர்மனியிலும் இந்நோய்க்கு பலர் பலியாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


தமிழ் மக்களுக்கேற்ற தமிழ் 'டயறி'

ஆனந்தா

நாட்குறிப்பு

ஆங்கில, தமிழ், முஸ்லிம் திகதிகளுடனும்மற்றும் விசேட குறிப்புகளுடனும், அநேக அனுபந்தங்களுடனும் 8 1/2'' X 5 1/2'' அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கமாக வெளிவந்துவிட்டது. நேர்த்தியான அச்சுப்பதிவு; சிறந்த கட்டுக்கோப்பு.

விலை ரூபா 2-50

ஆனந்தா அச்சகம்

யாழ்ப்பாணம்.



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

நத்தார் வாழ்த்துக்கள்


3வது வெற்றி வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்





ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - சாவித்திரி நடித்த
மகாதேவி



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,9-30
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
கணவன்



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்.- ஜெயலலிதா நடித்த
அடிமைப்பெண்



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா நடித்த
இரகசியப் பொலிஸ்-115



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். நடித்த
மகாதேவி
(புதிய கொப்பி)



ரசிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் வாழ்த்துக்கள்


REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Sidney James,
Joan Sims
in
DON'T LOSE YOUR HEAD



ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்



புதிய
றெக்கோட்டுகளுக்கும்
உலகில் புகழ்பெற்ற



றேடியோக்கள்
வாங்கவோ
விற்கவோ
அல்லது திருத்தவோ

யாழ்ப்பாணத்தில் முதல்தர ஸ்தாபனம்

எஸ். சுலைமான்கண்டு அன் பிறதர்

5-7, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 265 தந்தி: ''ஜஹான்''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா

நடித்த

# திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

இரகசியப் பொலிஸ்-115

நடித்த மகாதேவி (புதிய கொப்பி)

DON'T LOSE YOUR HEAD

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

## எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்

தமது அன்பு கலந்த
நத்தார் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்

# ராஜா யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ணு — கே, ஆர். விஜயா — வாணிஸ்ரீ
நடித்த

# மாஸ்டர் மதருஸ்

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த

## நத்தார் வாழ்த்துக்கள்!

## மகத்தான கிறிஸ்மஸ் திரைவிருந்து!

## இன்று குதூகல ஆரம்பம்!

# யாழ். ராணி சினிமாவில்

தினசரி 4 காட்சிகள்

## ★ எம்.ஜி.ஆர். ★ ஜெயலலிதா

★ சோ ★ மனோரமா ★ மனோகர்
★ அசோகன் ★ சந்திரபாபு
★ ராஜஸ்ரீ ★ ஜோதிலக்ஷ்மி

மற்றும்பலர் திறம்பட நடித்த
வெள்ளி விழா கண்ட ஈஸ்ட்மன் கலர் சித்திரம்!



புரட்சி நடிகரின்

# அடிமைப் பெண்

LOGES


சுப நத்தாரும் சந்தோஷமான புத்தாண்டும் உங்களுடையதாகுக




# ரோபியலக்

உற்பத்தியாளர்கள்
சிலோன் பெயின்ட் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்

GRANT-IB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் - புதுவருட
கொண்டாட்டங்களை
முன்னிட்டு
கேக் வகைகளுக்குரிய சகல
விதமான பொருட்களையும்
பெருந்தொகையாக வர
வழைத்துள்ளோம்!
மொத்தமாகவும், சில்லறை
யாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7148

ஈழநாடு
THE EELA NADU
நத்தார் சிறப்பிதழ்

நத்தார் - புதுவருட
நல்வாழ்த்து
பல வருடகாலமாக எமக்கு
ஆதரவு தந்து ஊக்குவித்த
அன்பர்களுக்கும் வாடிக்கைக்
காரர்களுக்கும்
எமது மனப்பூர்வமான
நல்வாழ்த்துக்கள்
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7148.

# வாழ்விக்கும் பெருஞ் சுடர் தோன்றிற்று

இயற்கையைப் படைத்த இறைவன் மானிடனையும் படைத்தார். படைப்பின் ஆட்சியாளனாக, சிங்கார வனத்திலே உலவவிட்டார். ஆயினும் அவன்மன நிறைவு பெற்றானில்லை. இறைவனைப் போல் ஆக வேண்டும் என்ற அவன் பெருவாழ்வையே வீழ்த்தியது.

ஆயினும் இருளிலே தடுமாறிய அவனுக்கு வான் வழிகாட்டும் ஒளிப்பிளம்பாக, வாழ்விக்கும் பெருஞ் சுடராக இறைவன் தன்மகவையே அனுப்புவதாக வாக்களித்தார். இருளிலே இடர்பட்ட மனுக்குலம் காலமெல்லாம், அவ்வாழ்விக்கும் செழுஞ்சுடரை எதிர் நோக்கியிருந்தது. இதோ! அச் செஞ்சுடர் பெத்லகேமில் தோன்றிவிட்டது.

பெத்லகேம் – யூதாவின் பெருநகரமெல்லாம் பொலிவிழக்க இச் சிற்றூர் மட்டும் பெருமை பெற்றது எவ்வாறு? துறவினுல் இரவலர் போல் தோன்றும் ஒரு சிறு குடும்பம். சூல்கொண்ட மாதரசி, அவளைத் தொடர்ந்து செல்லும் இளந்தொழிலாளி, வழி நடந்த களைப்பால் கூம்பிய மலர் வதனங்கள், எதையோ நினைத்து ஏங்கும் நெஞ்சங்கள், ஒவ்வொரு வாயிற் படியிலும் நின்று, நின்று வழி நடந்தனர். அந்த அருட் செல்வர்களின் வரவால் பொருட் செல்வரான அந்த வாயிலை உடையவர்கள் மட்டும் அந்த இளந் தம்பதிகளை வரவேற்க ஏன் மறந்தார்கள்? இரவலர் என்று தம் உறவையும் மறந்து யாரோ என்று நீக்கி விட்டார்களா? பொலிவு பெற்றிலங்கும் பெத்லகேம் தரணிகாக்க வந்த தற்பரனுக்கு இடமளிக்க மறுத்ததே என்று ஈரங்களில் தேன்சிந்தும் மலர்களைத் தாங்கிய புனிதவளனுர் உள்ளம் வருந்தினுர். ஆயினும் நெஞ்சம் தளர்ந்தாரில்லை. அவ்வூரின் அருகாமையில் மாடுகள் அடையும் தொழுவம் இருப்பது அவர் நினைவிலே தோன்றியது. தோன்றிய நினைவைச் செயலாக்க விரைந்தனர் அத் தம்பதிகள்.

தொழுவம் – மிருகங்கள் தங்கும் இல்லம் தூய்மையோ, சுகநிலையோ அற்ற இடம், ஆனுல் அந்த சாந்தி பொழியும் நள்ளிரவில் அத்தொழுவம் வரலாற்றின் அடித்தளமாக எதிர் காலத்தின் புண்ணியப் பூங்காவாக, நிகழ்காலத்தில் தூயவனின் பிறப்பிடமாக மாறியது. இருள் சோவியவுலகிற்கு பெருஞ் சுடர் வீசும் காலங்கரை விளக்கமாக மாண்பு பெற்றது.

நள்ளிரவு – தன் வெண் கொற்ற குடையின் கீழ் வாழும் மக்கள் தொகையைக் கணக்கெடுக்க விரும்பிய உரோமைப் பேரரசின் செங்கோல் வேந்தன். அந்த நள்ளிரவின் பெருமையையே, 'வாழ்விக்கும் பெருஞ்சுடரின் வருகையையோ அறியாத நிலையில் மண் அளக்கும் மன நிலையோடு துயின்று கொண்...

நின்றது. ஐயறிவு கொண்ட உயிரினங்கள் அந்த நன்னிகழ்வின் மகிழ்ச்சியில் களித்து நின்றன. வாடைக் காற்றும் இன்பவெறி கொண்டு சிங்கார நடனம் செய்து கொண்டிருந்தது, அப்பேறு பெற்றகுகையினுள் செவ்வானைப் பழிக்கும் செம்முகத் தினளான கன்னி அன்னை, பேரொளி வீசும் செஞ்சுடரான தேவமகன், தன்னுள் அசைவதை உணர்ந்து இன்ப உணர்வின் பேரெல்லையிலே நின்று மகிழ்ந்தாள். வாயிலைத்திறவாமலே பளிங்குச் செப்பினுள்ளிருந்து ஊடுருவிப்பாயும் ஒளிவெள்ளம் போல், தாய்மையின் வேதனையின்றி, கன்னிமைக்குப் பழுதின்றி, வன்மை செறிந்த வாலறிவன், பிறையினை விஞ்சும் நெற்றித் திலகமும் குவளையைப் பழிக்கும் கண்களும், எட்பூமூக்கும், பவளப் பேழை போன்ற செவ்வாயும், மெல்லிய கரங்களும் மண்ணகம் அறிந்திராத வண்ணச் சீரடிகளும் கொண்ட தேவகுழந்தையாக மண்ணிற் தோன்றினுர். வானகம் வரையில்லா மகிழ்ச்சி கொண்டது. வையகத்தில் நல்லுள்ளங்களில் சாந்தி நிரம்பியது. அறங்கள் தேறின, மறங்கள் தேய்ந்தன. வல்லவனின் பேரொளி... கும் ... யில் நரகின் வல்லமை ஒடு...

களும் அந்த நள்ளிரவில் இருக்கத்தான் செய்தன. மலையடி வாரத்தில் தங்கள் ஆடுகளைக்காத்து நிற்கும் அவர்கள் வறுமையின் திரு உரு, வெள்ளருவி நீரினைச் சுவைத்து, பசும்புல் தரைகளை மெல்லணையாகக் கொண்டு இயற்கையின் ஆற்றல்களோடு போராடி வாழும் கள்ளமில்லா வெள்ளை உள்ளங்கொண்ட இடையர்கள். 'கிறிஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கின்றுர்' என்ற வானவரின் கூற்று. அவர்களைக் களிப்பின் எல்லையிலே ஆழ்த்தியது. மின்னல் நேரும் அன்னை ஈன்ற அமலனைக் கண்டு தொழுதெழ அந்த வானுலக இன்பம் பொங்கி வழியும் அமரக் குகையை நோக்கிப்பீடு நடை நடந்தது அந்த இடையர் கூட்டம். செல்வப் பெருக்கில் திளைத்த செல்வந்தர்களையும் அதிகார போதையில் ஆழ்ந்திருந்த ஆணவக்காரர்களையும் பெருமனைகளில் வாழ்ந்த சுக விரும்பிகளையும்விடுத்து மண்ணகத்தைத் தேடிவந்த தேவமகன் வறுமையில் தோய்ந்து. எளிமையில் தவழ்ந்து. இயற்கையோடு இரண்டறக்கலந்து உறவாடிய அந்தக் கள்ளமில்லா வெள்ளையுள்ளங்களை பூவுலகில் முதன் முதலாகத்தான் சந்திக்கும் உயர்ந்த உள்ளங்களாகத் தேர்ந்தெடுத்தார். சாந்தியையும் சமாதானத்தையும் காணக்குவலயம் ஏங்குகின்றது. நாடுகளின் பேரவையிலும், அறிவியல் பாசறைகளிலும் அ...

"அமலன்"

# ஏழைகளின் திருவிழா

— யே. அருள்நேசன் —

பூவுலகின் கண்ணே அன்று முதல் இன்றுவரை வாடிநிற்கும் ஏழைகளின் திருவிழாவையேஇன்று அகிலம் பெருவிழாவாக, நத்தார்ப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றது. இவ் விழா ஓர் ஆடம்பரமான, கோலாகலமான, விழாவாக மாத்திரம் அமைந்து விட்டால் விழாக் கதாநாயகனின் நோக்கம் மறைக்கப்பட்டு விடும்.

இறைவன் மனித அவதாரம் எடுத்தபொழுது எண்ணியிருந்தால் ஓர் அரசனின் மைந்தனுக மாடமாளிகையில் தனக்கென ஓர் உல்லாசபுரியைத்தெரிந்திருக்கலாம். ஆனுல் அவர் அதனைவெறுத்தார். இந்த ஓர் இலட்சியம் தான் நத்தார் விழாவின் முக்கிய அம்சமாகும்.

ஏழை மரியாளுக்கும் தச்சன் சூசைக்கும் (வளர்ப்பு மகன்) மைந்தனுக, மந்தைகள் உறங்கும் குடிசையிலே பாராளும் மன்னருக்கெல்லாம் மன்னனுன யேசுபிரான்பிறக்கலானுர். இறைவனின் இந்த அவதாரம் தான் எளிமை என்னவென்றே அறியாத உல்லாசவாசிகளையெல்லாம் வருடம் ஒரு முறையென்றுலும் வறுமை என்றுல் என்ன என்பதனை ஓரளவு சிந்திக்கத் தூண்டுகின்றது.

யேசுவின் பிறப்பை இன்று நினைவில் கொள்ளும் நேரம் ஒரு புத்தாடை அணியும் செல்வந்தர்கள் இச் சமயம் அயலிலே உள்ளவறிய குழந்தைகள் ஏன், யேசுவின் சகோதரர்கள் என்று கூட கூறலாம். இவர்கள் உடுக்க உடையின்றிக் குளிரினுல் வாடுவதைக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். இல்லங்களிலே மிதமிஞ்சிய ஆடம்பரங்கள், பல்சுவைப் பண்டங்கள், மதுபானங்கள் நிறைந்திருக்கும் இந்தவேளையில் அயல் வீட்டார் வாழ இல்லமின்றி, குடிக்கக்கஞ்சியின்றி அல்லற்படுவதை இன்றைய விழாவின் கதாநாயகனது வாழ்வுடன் சம்பந்தப் படுத்திச் சிந்தித்தால் இந்த விழா செல்வந்தர்களுடையது தானு அல்லது ஏழைகளுடைய விழாவா எனத் தெரியலரும்.


ஒவ்வொரு நத்தார் பெருவிழாவும் ஓர் ஆடம்பரவிழாவாக மாத்திரம் அமைந்து விடாமல், உலகின் கண்ணே வாழும் ஏழைகளில் ஒருவருக்காவது நிரந்தரவாழ்வு கிடைக்கும் விழாவாகஅமைந்து விட்டால் அன்றுதான் அந்த இலட்சியக் குழந்தையின் எண்ணங்கள் நிறைவேறும் விழாவாக நத்தார் விழா அமைவுபெறும்.

பார்டன் மேதர்
சகலவிதமான கொண்டாட்டங்களுக்கும்
நினைவு கூரவேண்டிய ஒரு பெயர்.
நாற்காலிகள்-மேஜைகள்-டீப்போய்கள்-கிளாஸுகள்-
கோப்பைகள் - ஐஸ்கிறீம்கோப்பைகள்
முதலியவற்றை எல்லாம் எங்களிடம்
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
உடனடியாக திறமையான சேவை.
110, பிரதானவீதி—யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
நத்தார்—புதுவருட வாழ்த்துக்கள்!

சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்
நோர்தேன்
இண்டஸ்றீஸ்
8/1, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.
போன்: 7158

எல்லோர்க்கும்
எமது நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே




வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!
D. சேனுதிராஜா
(பல் கட்டுபவர்-கண்பரிசோதகர்)
9, மெயின் வீதி :; யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்



கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுன் நகை மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. என். எம்.
# மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணத்தில்

'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான

V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்

தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த

நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.

# V. K. இராசரத்தினம்

பிரபல றேடியோ
விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்

95, ஸ்ரான்லி றேட் :: யாழ்ப்பாணம்.



வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த

நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# டயரும்ஸ்

54, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.


பிய உரோமைப் பேரரசின் செங்கோல் வேந்தன். அந்நள்ளிரவின் பெருமையையே, வாழ்விக்கும் பெருஞ்சுடரின் வருகையையோ அறியாத நிலையில் மண் அளக்கும் மன நிலையோடு துயின்று கொண்டிருக்கிறான். அவன் பேரவையில் இடம் பெற்றிருந்த வானியல் வல்லுர்கள் கீழ்த் திசையில் தோன்றிய அதிசயத் தாரகை கூறும் எதிர் காலச் சிறப்பை ஆய்ந்து ஓராது துயிலுகின்றனர் யூதேயாவின் காவலனை ஏரோதும், யூதர்களின் இராஜவாக்கிய அம்மாமன்னனையோ, மாட்டுத் தொழுவத்தையோ, விசித்திரத் தாரகையையோ, பற்றி எண்ணாது, மதுவின் மயக்கத்திலே வீழ்ந்து கிடக்கின்றான். அச்சிற்றூர் துயில் மடந்தையின் பெருங்கரங்களிலே ஆழ்ந்து கிடக்கிறது. ஓரிரவைக் கழிக்க இடங்கொடுக்க மறுத்த அதன் மக்கள் கூட்டம் அவ்விரவில் நிகழும் பெருநிகழ்ச்சிகளை அறியாது உறக்கம்கொண்ட அவ்வேளையில் அறிவியல் மேதையான சாலமோனும், முன்னுரையாளர்களான தாவீதரசரும் இசையாசும், இசக்கியேலும் ஏக்கம்கொண்டு சந்திக்கக் காத்திருந்த அந்த வான் களிக்கும் நல்லிரவு, வையகத்தின் சிந்தனைக்கு எட்டாத நிலையில் மலர்ந்து விட்டது.

மாட்டுத் தொழுவம்இறை ஒளியின் பேராற்றலில் திளைத்து நின்றது, வான் இசையின் பேரொலியில் மூழ்கி வையகத்தில் நல்லுள்ளங்களில் சாந்தி நிரம்பியது. அறங்கள் தேறின, மறங்கள் தேய்ந்தன. வல்லவனின் பேரொளி இலங்கித் துலங்கும் அந்நள்ளிரவு வேளையில் நரகின் வல்லமை ஒடுங்கியது.

வையகத்தை வாழ்விக்கும் செழுஞ்சுடரின் மலர்க்கண்களோடு, கன்னி அன்னையின் கருணைக்கண்களும் கலந்தன காய்கதிர்ச் செல்வனின் ஒளி பெற்றுப் பொலியும் தண்ணிலவைப்போல் அவள் முகம் ஒளிசிந்தியது. ஆய்ந்த நூல் கடந்தார் அறிவினையும் மிஞ்சிய அறிவுச்சுடரான கன்னி அன்னை காந்தள் மடரினைப் போன்ற நேரியதன் செங்கரத்தினில் ஏந்தி நெஞ்சோடு அணைத்தாள் அத்தேவமகனின் மெல்லடிகளை நீவி வணங்கினாள்.

> காந்தள் நேரிய செங்கரத்
> தேந்தினள்;
> எந்தமார்பில் இறுகவுஞ்
> சேர்த்தனள்;
> வாய்ந்த பூம்பதம்
> நீவி வணங்கினள்
> ஆய்ந்த நூற்கடந்தா
> ருணர் வெய்தினள்''

என்று தம்தேம்பாவணிக் காவியத்தில் அப்புனிதம் பொங்கும் இரவு ஊட்டிய களிப்பேருவகையை போற்றுகின்றார் தமிழ் கவிஞர் வீரமாமுனிவர்.

வாடைக்காற்று பேரொலியோடு வீசிக் கொண்டிருக்கிறது. நடுங்கும் குளிரின் கொடுமையால் செவ்வாய் திறந்து குரல் சிந்துகிறார் வானிறையோன். வறுமையின் பலிபீடத்தில் வீரிடும் அக்குழந்தைக்கு மாட்டுக் கொட்டில்தான் அத்தாணி மண்டபம். பசும் புல்லுத்தான் அவர் நெஞ்சைக் கவர்ந்த மணித்தொட்டில், கன்னி அன்னை மெல்லிய துணியால் போர்த்தி அக்குளிரிலிருந்து அவரைக் காக்கின்றாள். ஒரே வார்த்தையால் யாவையும் படைத்த தேவமகன் ஆற்றலற்றவராக கன்னி அன்னையின் காக்கும் கரங்களில்புகலிடம் கண்டார்.

வையகமே உறங்குகின்றது, ஆனால் தூங்காத கண்கில் முதன் முதலாகத்தான் சந்திக்கும் உயர்ந்த உள்ளங்களாகத் தேர்ந்தெடுத்தார்

சாந்தியையும் சமாதானத்தையும் காணக்குவலயம் ஏங்குகின்றது. நாடுகளின் பேரவையிலும், அறிவியல் பாசறைகளிலும் அந்தச்சமாதானத்தைக் காண முடியவில்லை. கலையிலும், காவியத்திலும் செல்வச் செழுமையிலும் அணியிலும் நவீன த்திரையிலும் நாடக அரங்கிலும் சாந்தியைத் தேடி உலகம் அல்லலுறுகின்றது. ஆனால் அன்று வறுமையின் செம்மையில் இருளடைந்த குகையில் சாந்தி தவழ்த்தது வானிலிருந்து இறங்கிய சாந்தியின் பெருஞ்சுடர் வையகத்தின் நன்னெஞ்சங்கள் தோறும் தன் செந்நாக்குகளை நீட்டி சாந்தியின் அவிரொளியை ஏற்றி வைத்தது பூமியில் மாசில்லா நல்லுள்ளங்கள் அன்றும் இன்றும் என்றும் சாந்தி தவழும் நெஞ்சங்களே! வாழ்விக்கும் சாந்தியின் பெருஞ்சுடரான தேவக்குழந்தை நம் நெஞ்சங்கள் தோறும் சாந்திதரும் வாழ்விக்கும் பெருஞ்சுடரை இப்புனிதப் பெருநாளில் ஏற்றிவைத்து ஆசீர் அருள்வாராக.

— —

## விசேஷ புகையிரத சேவை

கோட்டை, புதன்

இலங்கைப் புகையிரத சேவை நத்தார் பண்டிகையையொட்டி இன்றும் தேசிய தலைவர்கள் ஞாபகார்த்ததினமான ஜனவரி 1-ம் திகதியும் போயாதினத்தன்று போல் நடைபெறும் எனப் புகையிரத இலாகா அறிவித்துள்ளது

இப்பண்டிகைகளுக்குச் செல்லுபவர்களுக்கு பிரயாண வசதியைச் செய்து கொடுக்குமுகமாக இவ்விரு தினங்களும் யாழ்ப்பாணம், காலி, கண்டி ஆகிய இடங்களுக்குக் கொழும்பிலிருந்து விசேஷ புகையிரத சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

தெரியலரும்.


ஒவ்வொரு நத்தார் பெருவிழாவும் ஓர் ஆடம்பரவிழா


# துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.



# சக்தி வாய்ந்த
# சர்வ பூச்சி நாசினி
# பொலிடோல் ஈ-605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.


நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

| | | | |
|---|---|---|---|
| 100 சி. சி. | ( 4 அவுன்ஸ்) விலை | = | ரூ. 5/- |
| 250 சி. சி. | ( 9 அவுன்ஸ்) விலை | = | ரூ. 10/- |
| 1000 சி. சி. | (35 அவுன்ஸ்) விலை | = | ரூ. 35/- |

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



ஷ 663.8

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்

# செ. காசிப்பிள்ளை அன் கோ.

(பிரபல பிடவை வியாபாரிகள்)

82, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: சி. கே. பி. 74/8, பெரியகடை, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்களுக்கும், வர்த்தகப்பெருமக்களுக்கும்
மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

நத்தார் வாழ்த்துக்கள்!

மில்க்வைற் சோப் மேலுறைகளை கொடுத்து புதுவருட அன்பளிப்புகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற் சோப் தொழிற்சாலை

527, கே. கே. எஸ். றோட், [போன்:7233] யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்னும் கொஞ்சக்காலம் உங்களுக்கு வெளிச்சம் உண்டு. ஆதலால் இருள் உங்களை மூடாதபடி உங்களுக்கு வெளிச்சம் உள்ள போதே நடந்து கொள்ளுங்கள். ஏனெனில்இருளில் நடக்கிறவன் தான்போகிறது எங்கே என்று அறியான். —கிறிஸ்துநாதர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் செளமிய வருஷம் மார்கழி மாதம் 01-ந் திகதி (25-12-69)

## கிறிஸ்து ஜயந்தி

இன்று கிறிஸ்துஜயந்தி. உலகெங்குமுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் இத்திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிருர்கள் அவர்களுடைய மகிழ்ச்சியில் இதர சமயத்தைச் சார்ந்த மக்களும் கலந்துகொண்டு மகிழ்வடைகின்றனர்.

1969-ம் ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில் கிறிஸ்துபெருமான் பூமியில் அவதரித்தபோது அவரது வருகையை அறிவித்து வானுலகில் உன்னத தேவனுக்கு மகிமையும் பூவுலகில் சமாதானமும் பிறர்மேல் விருப்பும் பிறக்கட்டும்' என்று வானவர் பாடினராம்.

மனிதர் சமாதானத்துக்கெதிரகக வேலை செய்யும் பொழுதும் மனுக்குலம்சமாதானத்தையே நாடுகின்றது. சமாதானத்துக்காகப் போர்களும் நடைபெறுகின்றன. நடைபெற்றிருக்கின்றன

ஆனுலும் நிலையான சமாதானம் இன்னும் ஏற்படவில்லை. இன்னும் ஆங்காங்கே போர்முரசு ஒலிக்கத்தான் செய்கின்றது; துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கத்தான் செய்கின்றன.

வியட்னமிலும், மேற்காசியாவிலும் மற்றும் பலஇடங்களிலும் பல வருடங்களாக ஒலித்துக் கொண்டிருக்கும் போர்முரசும், துப்பாக்கிவேட்டுக்களும் அழுகுரல்களும் குன்று ஒருநாளில் கிறிஸ்துநாதர் அவதரித்த இன்றைய தினமான ஒரு நாள்ளில் ஓய்ந்து அமைதி நிலவும் இந்த அமைதி நிரந்தரமாக ஆண்டாண்டுதோறும் நிலைபெற்றுவிடக்கூடாதா என்று மனுக்குலம் ஏங்குகிறது.

மனிதன் பல துறைகளிலும் வியக்கத்தக்க முறையில் வெற்றியீட்டி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிருன். கல்வி விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றில் அவன் மகத்தான சாதனைகளை நிலைநாட்டி வருகிருன்- இந்த முன்னேற்றம் உதவுமென்ற நம்பிக்கையில் தான் புதியபுதிய கண்டுபிடிப்புகளைச் செய்து சாதனைகளை நிலைநாட்டுவதற்குத் துணிகிருன். என்றுலும் அவன் மனதில் அமைதியில்லை; சாந்தியில்லை; சமாதானம் இல்லை ஆனுலும் மனுக்குலத்தின் விருப்பம் எப்படியாவது சமாதானத்தைக் காணவேண்டும் என்பதுதான்.

'1970-ம்ஆண்டு மக்களே! சமாதானம் உங்களுடன் இருப்பதாக மனிதன் அண்மையிலும் சேய்மையிலுமுள்ள தன் யாத்திரையை நோக்கின் சமாதானமே அவனது உணர்வின் பிரதான கருத்தாக இருக்க வேண்டுமென பிரகடனம் செய்கிறேம் திரும்பவும் ஒருமுறை நாம் சமாதானத்தையே பிரகடனம் செய்கிறேம்' என்று ஆரும் சின்னப்பபாப்பரசர் சமாதான தினத்தைக் கொண்டாடுமுகமாக விடுத்துள்ள செய்தியில் கூறியிருக்கிருர்.

சமாதானத்தை சகல சமயத்தவர்களும் விரும்புகிருர்கள். எல்லாச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன. பிறருக்கு உதவிசெய்து பிறரும் வாழ்ந்து தாமும் வாழ வேண்டும் என்றுதான் சமயங்களின் அடிப்படைத்தத்துவம் நல்லதைச் செய்ய வேண்டுமென்பதுதான் சமயங்கள் சொல்கின்றனவேயொழிய தீயதைச் செய்யும்படி எந்தச் சமயமும்சொல்லவில்லை.

ஒருநாளில் சமாதானத்தை அனுஷ்டிப்பது நல்லது. ஆனுல் ஒரு வருடத்தையே சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஒதுக்குவது மேலும் பல வருடங்களுக்கு சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு பெரும் பயிற்சியாக இருக்கும் இந்த வகையில் பாப்பரசர் 1970-ம்ஆண்டைச் சமாதான ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதை உலக சமாதானத்தை விரும்

# தீர்க்கமான தீர்மானமின்றி ரபாத் மாநாடு முடிந்தது

ரபாத் டிச. 24

மொராக்கோ தலைநகரான ரபாத்தில் நடைபெற்ற அரபுத்தலைவர்களின் உச்சிமாநாடு, இஸ்ரேலுக்கு எதிராக அரபுநாடுகளின் எதிர்ப்பை ஒருமுகப்படுத்துவது குறித்து ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளாமலே முடிவடைந்தது.

மாநாட்டின் இறுதியில் மொராக்கோ மன்னர் ஹஸன் பேசுகையில் பாலஸ்தீன அரபுக் கொமாண்டோக்களுககு அரபுநாடுகளின் ஆதரவு எப்போதுமே இருந்துவரும் என்று உறுதியளித்தார்.

மாநாட்டின் இறுதியில் அறிக்கையெதுவும் வெளியிடப்படவில்லை, மாநாட்டு இறுதி நிகழ்ச்சிகள் வெறும் குழப்பகரமாக விருந்ததாகக் கூறப்பட்டது ஐக்கிய அரபுக்குடியரசுத் தலைவர் அப்துல் நாஸர் காலைக் கூட்டத்தோடு புறப்பட்டுவிட்டார்.

பாலஸ்தீன அகதிகள் விஷயத்தில் அரசியல் தீர்மானம் எதுவும் செய்யப்படாததின் காரணமாகவே அறிக்கையெதுவும் வெளியிடப்படவில்லை யென்று கூறப்பட்டது.

### ரஷ்யா நிராகரிப்பு

மேற்காஸிய நெருக்கடி சம்பந்தமாக அமெரிக்கா சமர்ப்பித்திருந்த பத்து அம்சத்திட்டத்தை சோவியத் யூனியன் நிராகரித்து விட்டதாகக் கருதப்படுகின்றது.

கடந்த அக்டோபர்மாதத்தில் இந்த அமைதித்திட்டத்தை அமெரிக்கா சமர்ப்பித்திருந்தது. இந்தத்திட்டம் சம்பந்தமாக சோவியத் யூனியன் நீண்டதொடுபதில் அனுப்பியிருக்கின்றது. இந்த பதிலில் ஆக்கபூர்வமான ஒன்றையும் காணமுடியவில்லை யென்று அமெரிக்க அதிகாரிகள் கூறியிருக்கிருர்கள்.

### "திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவினுல்

# சேர் இராமநாதன் பெயருக்கு அவமதிப்பு ஏற்படாது"

### தமிழரசுத் தலைவர் இராசமாணிக்கம் கூறுகிருர்

யாழ்ப்பாணம், வியா.

'பல்கலைக்கழகத்தை திருகோணமலையில் அமைப்பதினுல் திரு. இராமநாதன் போன்ருேரை அவமதிப்பதாக அமையாது அன்றிருந்த சூழ்நிலையில் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில்அமைய வேண்டுமென திரு.இராமநாதன் கருதியபோதும், இன்றைய சூழ்நிலையில் நாம் அந்த யோசனையை புனராலோசனை செய்ய வேண்டியிருக்கிறது.' இதனுலேயே திருமலையில் பல்கலைக்கழகத்தின் தலைமை அலுவலகம் அமைய வேண்டுமென்று கூறுகிருேம்.'

தமிழரசுக்கட்சியின் தலைவரும் பட்டிருப்பு எம்.பி.யுமான திரு. எஸ் எம் இராசமாணிக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திரு. இராமநாதன், ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தாவும் இன்னும் பல தமிழ்ப் பெரியார்களும் விரும்பியது இந்நாட்டின் தமிழ் மக்களின் கலை, கலாச் சாரம், காப்பதற்கும் கல்விச் சுதந்திரம் பெறுவதற்கும் பூரணத்தும் வாய்ந்தஒரு பல்கலைக் கழகமே. அன்றிருந்த சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டுமென திரு. இராமநாதன் கருதியபோதும் இன்றைய சூழ்நிலையில் நாம் அதைப் புனராலோசனை செய்வது திரு. இராமநாதனை அவமதிப்பதாக அமையாது. இப்பெரியார்களின் பெயரையும் நோக்கங்களையும் அரசியல் ஆதாயத்திற்காகச் சிலர் உபயோகிக்க முயலுவது இந்நாட்டுத் தமிழ் மக்களின் எதிர்காலத்தை சிதைக்கும் முயற்சியாகும்'

'எங்கு பல்கலைக்கழகம் அமையவேண்டும்; அது எப்படி அமையவேண்டும் என்பதை வட கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் நிதானமாகச் சிந்திக்கவேண்டும், வடக்கு மாகாணத்தில் அதிகமான மாணவர்களும், கிழக்கு மாகாணத்தில் போதிய இடவசதியும் இருக்கும் காரணத்தினுல் இரு மாகாணங்களுக்கும் பொதுவானதும் [illegible] மான திருகோணமலையில் பல்கலைக்[illegible]கத்தில் தலை வதுபொருத்தமாகும். இதை உணர்ந்த தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினரும்கூட இதையே பொருத்தமான இடமென பல ஆண்டுகளுக்கு முன்னே தீர்மானித்தனர். இதை நாம் ஏகோபித்து ஏற்றுக்கொள்ள முடியுமானுல் வைத்தியம், பொறியியல், நுண்கலை, பொதுவிஞ்ஞானம் கிருஷிகம் ஆகிய பகுதிகளைப் பொருத்தமான வகையில் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைக்கலாம்.

'நாம் எதிர்பார்க்கும் பல்கலைக்கழகத்தை விரைவில் பெறமுடியும். அன்றேல் எமக்கிடையேயுள்ள அபிப்பிராய பேதத்தைப் பயன்படுத்தி பிரித்தாலும் முறையைக் கையாளும் அரசாங்கம் பல்கலைக்கழக அமைப்பை சுலபமாகத் தட்டிக்கழிக்கும்.

வடக்கையும் கிழக்கையும் இணைத்து இயங்கக்கூடிய ஒரு கலைக்கூடத்தை அமைக்க நாம் அனைவரும் ஒரே குரலில் பேசவேண்டுமென வேண்டுகின்றேன்' என்றும் அவர் கூறியுள்ளார்.

— —

'இலிநெருக்கி

### "பொருளதார பிரச்னைகள் தீரவேண்டும்"

யாழ்ப்பாணம்,வியாழன்

"எமது தொகுதிகளில்வீடு இல்லாத பொது மக்களுக்கு வீடமைப்புத்திட்டங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கபட வேண்டும். சாவகச்சேரித் தொகுதி மக்கள் பொருளாதார பிரச்னைகளால் அதிகம் பின் தங்கியிருக்கின்ருர்கள். 14 வருடங்களுக்கு முன் இருந்த நிலைமை மீண்டும் ஏற்படவேண்டும்."

இவ்வாறு நாவற்குழி தெற்கு கடற்கரைப்பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னுள் எம். பி. திரு. வே.குமாரசாமி குறிப்பிட்டார்.

திரு. க. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு.குமாரசாமி மேலும் பேசுகையில் நாவற்குழிப்பகுதியில் விவசாயத் திட்டங்களையும், மற்றும் தொழில் பேட்டைகளையும் ஆரம்பிக்க நல்ல இடவசதி உண்டென்றும் 14 வருடங்களாக இது புறக்கணிக்கப்பட்டுள்ளதெனவும் கூறினுர், மற்றும் திரு சி.நவரத்தினம் திரு. இரா ஜகுலேந்திரன், திரு.எஸ்.பி. மயில்வாகனம் ஆகியோரும் பேசினர்.

கடற்கரைப்பகுதி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் உறுப்பினர் வருமாறு:

தலைவர்: க. தம்பிராசா, உபதலைவர்: சி.நவரத்தினம், காரியதரிசி: க.சிவராசா, உபகாரியதரிசி: செ. திருச்செல்வம், தனதிகாரி: செ. முருகையா. 50பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. (தே.நி)

— —

### யாழ். கூட்டுறவு ஊழியர் சங்கம்

ஊர்காவற்றுறை, புதன்

யாழ்ப்பாணம் பட்டினப் பகுதியில் கடமையாற்றும் கூட்டுறவு ஊழியர்கள் தமக்கென ஒரு சங்கத்தை நிறுவியுள்ளனர்,

அகில இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் கிளையாக நிறுவப்பட்ட இச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் நீராவியடி நாவலர் மண்டபத்தில் திரு கே, தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது, பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு கே, தியாகலிங்கம் கௌரவ காரியதரிசி திரு இரா லோகநாதன், தன

# நாட்டிலும் நகரிலும்

முதலாவது நத்தால்தினத்தன்றிரவு ஆகாயத்தில் ஜெகஜோதியாகத்தோன்றி, கீழத்தேசத்திலிருந்து வந்த மூன்று 'அரசர்' களையும் இயேசு கிறீஸ்து நாதர் பிறந்த பெத்லஹம் நகருக்கு இட்டுச் சென்ற அந்த மர்மமான விண்ஞெளி யாத? இயேசுவின் பிறப்பை குறிப்பதற்காகவே தோன்றிய ஓர் அற்புதம் பிரத்யட்சமா, அல்லது சாதாரணமாக வானத்தில் தோன்றக் கூடிய ஓர் அபூர்வக் காட்சியா? அற்புதமல்ல என்று வைத்துக்கொண்டால் அது ஒரு நட்சத்திரமா, அல்லது ஒரு தூமகேதுவா? நட்சத்திரம் என்ருல் எந்த நட்சத்திரம்? அல்லது பேரொளியுடன் தோன்றிய இந்த வஸ்து வழக்கமாக நாம் காணும் சூரிய மண்டல கிரகங்களில் ஒன்ரு, அல்லது இரண்டு மூன்றின் சங்கமமா?

இயேசுநாதர் பிறந்தநாள் தொடக்கம் வான சாஸ்திரிகள் இந்தக்கேள்விகளுக்குஒரு சரியான விடை கண்டு பிடிக்க முயன்று வருகிருர்கள் பிபிலிய நூலில் கூறப்பட்டுள்ள சொற்ப உண்மைகளைக் கொண்டு தீர்மானமாக எதையும் சொல்ல முடியாவிட்டாலும்சிலஹேஷ்யங்களை மட்டும் எடுத்துக் கூறமுடியும்.

'நத்தால்' என்ற வார்த்தைக்கு லத்தீன் மொழியில் 'பிறப்பு' என்று அர்த்தம். லகர ரகர மயக்கத்தினுல் இது 'நத்தார்' என்றும் வழங்குகிறது. பின்பு இது கிறீஸ்து,-மஸ், அதாவது கிறீஸ்து பூஜை, என்ற பெயரைப் பெற்றது.

பெத்லஹம் நகரை நோக்கிச்சென்ற அந்த மூன்று 'அரசர்' களும் 'மாஜி' கள் எனப்படுவர், பாரசீகத்து மதகுருமாரை கிரேக்க மொழியில் 'மாஜி' கள் என்றழைத்தனர். இவர்கள் வான சாஸ்திரம், மாந்திரீகம் முதலிய ஞானங்களில் வல்லவர்கள், 'கீழத்தேசத்து ஞானிகள்' என்று குறிப்பிடப் பட்டிருப்பதால் அவர்கள் இந்தியா போன்ற நாட்டினராயும் இருக்கலாம். இந்த மூவரையும் இயேசுவிடம் அழைத்துச் சென்றது ஆகாயத்தில் சிவவாரங்களாகவே தொடர்ந்து காட்சியளித்துக் கொண்டிருந்த அந்தப் பெரும் ஜோதி, வான சாஸ்திரிகளாதலால் அதன் தோற்றம் உலகுக்கு ஏதோ ஒரு பெரிய நன்மையைக் குறிக்கிறது என்று ஒரே பாகையில் ஒன்றுகூடிச் சங்கமமாயிருந்தாலும் அந்தச் சேர்க்கை ஓர் அசாதாரண பிரபையைக் கொடுக்கும். ஆனுல் இப்படிப்பட்ட சேர்க்கை சில மணிநேரத்துக்கே நீடித்து நிற்கும். பிபிலியத்தில் கூறப்பட்டபடி சில வாரங்களுக்கு நீடித்திராது.

வால் நட்சத்திரம் என்று சொல்லப்படும் தூமகேதுக்கள் பல வருடங்களுக்கொருதடவை பூமியில் தோற்றப்படும். இவை எப்பொழுது வரும் என்று விஞ்ஞானிகளுக்கே முன் கூட்டி தெரியாது, பூமியிலும் பார்க்க பல்லாயிரம் மடங்கு பெரியவையான இவை தோன்றுவது பொதுவாக துர்நிமித்தமாகவே எல்லோராலும் கருதப்படுகிறது. இவை ஆகாயத்தில் சில நாட்கள் தொடர்ச்சியாக காட்சியளித்து விட்டு பின்பு மறைந்துவிடும். 'மாஜி' களுக்கு வழிகாட்டியது ஒரு தூமகேதுவாய் இருக்கலாமா?

இயேசு பிறந்த சமயம் தூமகேது எதுவும் தோற்றப்பட்டதாக ஓர் அத்தாட்சியுமில்லை. ஆனுல் அதற்குப் பல வருடங்களுக்கு முன்பு ஒன்று தோன்றியதை விளக்க பிபிலியத்தில் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. எகிப்திய மன்னன் ஃபேரோ யூதர்களை தனது நாட்டில் சிறைவைத்திருந்தபோது இச்சம்பவம் நடந்தது. 'ஜெஹோவா ஆண்டவன் ஆகாயத்திலிருந்து கல்லையும் மண்ணையும், இரத்தத்தையும் நெருப்பையும், தவளை புழுக்களையும் பூமிமீது சொரிந்தார். நதிகள் எல்லாம் ரத்தமாய் ஓடின. எகிப்து தேசத்தில் கொடிய கொள்ளை நோயும் இருளும் சூழ்ந்துகொண்டன. இதற்குப் பின் ஃபேரோ அரசன் மோஸேஸின் ஆட்களை விடுவிக்க சம்மதித்தான். ஆனுல் உடனே மனம் மாறி அவர்களை துரத்திக்கொண்டு போனுன். அப்பொழுது இன்னெரு அதிசயம் நிகழ்ந்தது. செங்கடல் பிரிந்து யூதர்களை மட்டும் மறுகரை சேர்ப்பித்துவிட்டு ஃபேரோவின் ஆட்களை விடாமல் மறுபடியும் சேர்த்துக் கொண்டது.

பிபிலியத்தில் கூறப்பட்டுள்ள இச்சம்பவங்கள் ஒரு தூமகேதுவின் விஜயத்தையே குறிக்கின்றன. ஆனல் இயேசுநாதர் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் வியக்கத்தக்க முறையில் வெற்றியீட்டி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறன். கல்வி விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றில் அவன் மகத்தான சாதனைகளை நிலைநாட்டி வருகிறன்- இந்த முன்னேற்றம் மனுக்குலம் மேலும் சிறப்பான பூரணத்துவமான வாழ்வுபெற உதவவேண்டும்; மேலும் பல வருடங்களுக்கு சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு பெரும் பயிற்சியாக இருக்கும் இந்த வகையில் பாப்பரசர் 1970-ம் ஆண்டைச் சமாதான ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதை உலக சமாதானத்தை விரும்பும் மனுக்குலம் நிச்சயமாக வரவேற்று அனுஷ்டிக்குமென்று நம்புவோம்.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 10-ம் திகதி [25-12-69]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள் புதுமையான செய்தியொன்று கிடைக்கக்கூடும். புதிய தொழில்துறையொன்றில் வாய்ப்புக் கிடைக்கலாம். முன்னேற்றத்துக்கு இடமுண்டு.

**ரிஷிபம்-** பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். திருடர்கள் பயத்துக்கும் இடமுண்டு. முடக்கிய வேதனம் கவலையைத் தரலாம் செலவினங்களை மிகவும் கட்டுப்படுத்திக் கொள்ளவும். தன்கையே தனக்குதவி.

**மிதுனம்-** கொள்கையில் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடுவீர்கள். ஆணவப் பேச்சு ஆபத்தைத் தேடித்தரலாம். பிள்ளையொன்றின் பிணி கவலையைக் கொடுக்கும். அமைதியுடன் செயலாற்றவும்.

**கடகம்-** துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும். பாலியல் உணர்ச்சி மேலிடும்: விருந்துபசாரத்துக்கும் இடமுண்டு. புதிய நண்பர்கள் உறவாடுவதற்கு முன்வருவார்கள். இனிப்பான தினம்

**சிம்மம்-** திட்டமிட்டுச் செயல்பட விரும்புவீர்கள் எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவார். உடலில் சோர்வுக்கு இடமேற்படும். சிலர் வாதரோகத்தினுல் பீடிக்கப்படுவர்.

**கன்னி-** புதுமையான அனுபவங்கள் கிடைக்கக்கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் புதிய சாதனையைஉருவாக்குவார்கள். அறிவுத்தாகம் மேலிடும். கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்தப்படும். வீட்டில் சுபகருமம் இடம்பெறலாம்.

**துலாம்-** புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு அரசியல்வாதி ஒருவர் ஆதரவு கொடுப்பார். இதயத்தில் இன்பம் பொங்கும்.

**விருச்சிகம்-** முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும். இருள்படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும். மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் அதிக கவனத்துடன்இருக்க வேண்டும்.

**தனுசு-** இரக்கசிந்தை மேலிடும். மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள். வீட்டிலுள்ளவர்களின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். புதுமணத் தம்பதிகளுக்கு அதிஷ்டஇலாபங்களும் கிடைப்பதற்கு இடமுண்டு.

**மகரம்-** நிழலுடன் போராட்டம் நடத்துவீர்கள். உங்கள் செல்வாக்கைக் குறைப்பதற்காக எதிரிகள்கண்துடைப்பு வேலைகள் நடத்துவர். பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு கட்டுப்பாட்டுடன் நடக்கவும்.

**கும்பம்-** ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில்பெற்றேரும் துணை நிற்பர். விருந்தினர்கள் வருகையால் வீடே கலகலப்பாக இருக்கும். பெரியோரைப் பேணவும்.

**மீனம்-** ஓய்வையும் உல்லாசத்தையும் விரும்புவீர்கள். தொழில்துறையில் விரைவில் நல்ல மாற்றம் ஏற்படலாம். உங்களின் ஆதரவைத்தேடி அரசியல் வாதிகள் படையெடுப்பார்கள். இன்று பொன்னான தினம்.

---

யில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திரு. இராமநாதன், ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தாவும் இன்னும் பல தமிழ்ப் பெரியார்களும் விரும்பியது இந்நாட்டின் தமிழ் மக்களின் கலை, கலாச் சாரம், பாரம்பரியங்களைப் பேணிக் கிழக்கு மாகாணத்தில் போதிய இடவசதியும் இருக்கும் காரணத்தினுல் இரு மாகாணங்களுக்கும் பொதுவானதும் வசதியானதுமான திருகோணமலையில் பல்கலைக்கழகத்தில் தலைமைக்காரியாலயம் அமைய ஒரு கலைக்கூடத்தை அமைக்க நாம் அனைவரும் ஒரே குரலில் பேசவேண்டுமென வேண்டுகின்றேன்' என்றும் அவர் கூறியுள்ளார்.

---

ஆசிரியருக்கு கடிதங்கள்

## முனீஸ்வரன் வீதியின் அவல நிலை

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பஸ் நிலையத்தையும், கோட்டை முனியப்பர் ஆலயத்தையும் இணைத்து நிற்கின்ற வீதி வழியே நடந்துகொண்டிருந்தேன். மாலை மங்கிய நேரம்; நாலைந்து பேர் செவிக்குவக்கா வார்த்தைகளைப் பேசிய வண்ணம் பாதையை மறித்து நின்று கைகலப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்; மது வாடை குப்பென்று வீசியது. முனீஸ்வரன் வீதியெங்கணும் நிறைந்து கிடக்கின்ற கள்ளுக் கடைகளே ஆங்கு அடிக்கடி நிகழ்கின்ற சொற்போர்களுக்கும், கைகலப்புக்கும் காரணமாகின்றன. ஆண்டவனின் நாமத்தைத் தன்னகத்தேகொண்ட வீதியொன்று இங்ஙனம் அமைதி நாடும் பாதசாரிகளின் உபயோகத்துக்கு ஒவ்வாத நிலைக்கு உள்ளாவதா என்று மனம் நொந்தேன்.

அமைதியை விரும்புகின்ற மக்கள் வதியும் நகரின் மத்தியிலே இத்தகைய கள்ளுக் கடைகளின் சங்கமகங்கையொன்று இருக்க வேண்டியது அவசியந்தானு? முனீஸ்வரன் ஆலயத்துக்கு நேர்முன்னே இந்த அவல நிலை நிலைப்பது நன்றே... இதனையிட்டு யாராவது கவனித்துச் செய்யாரோ?... அங்குள்ள கள்ளுக்கடைகளை அப்புறப்படுத்தி நகரின் புறத்தே அமைத்தல் முற்றிலும் உசிதமானதொன்றன்றே!

கள்ளை மறைந்துதானும் பருகி அறிவு மயங்குபவர் ஊர்மக்களால் அறியப்பட்டு அவர்களால் எக்காலத்துக்கும் நகைப்புக்கு ஆளாவர் என்றார் வள்ளுவர்.

'உள் ஒற்றி உள்ளூர் நகப்படுவர்; எஞ்ஞான்றும்<br>கள் ஒற்றிக் கண் சாய்பவர்'

இவ்வாருகப் பஞ்சமா பாதகங்களிலொன்றான மதுவை —அதுவும் முனீஸ்வரன் ஆலயத்து முன் வீதியிலே —அருந்திவிட்டு மக்களுக்கு இடைஞ்சல் தரும் இந்நிலையையிட்டுக் காந்தி நூற்றாண்டு கொண்டாடும் இச்சமயத்திலாவது யாராவது ஆவன செய்வார்களா? மதுவை அருந்தினுலும் அனுமதிக்கலாம். ஆனுல் அதனுல் மற்றவர்களுக்கும் தொல்லை வருமானுல் எவ்வாறு அனுமதிக்கலாம்? மாநகரசபை இதுபற்றிக் கரிசனை காட்டுமா?

ஐ. எஸ். இராசா<br>யாழ்ப்பாணம்.

0 0 0

## தணிக்கைசபை கண்டிக்கப்பட வேண்டும்

20-12-69 இதழில் 'அடிமைப்பெண்' பற்றித் தணிக்கைசபை செய்த முடிவை 'ஈழநாடு' பத்திரிகையில் கண்டு, ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்தேன், தமிழ் மககள் எதிரியை நேருக்கு நேர் காண்பதில்தான் பெருமை கொள்வார்கள், ஆனுல் இந்தத் தணிக்கை குழுவினர் எதிரிகள் அல்லாதோரையும் கூட திரையில் காண அஞ்சி ஓடுகின்ருர்கள். இத்தகைய விவேகிகளால் தான் இன்றைய ஈழம் வழிநடத்தப்படுகின்றது. எங்கும் எதிலும் ஒருமிரட்சி ஒரு துவேசம், இதுதான் இன்றைய அரசாங்கத்திலும் அதன் அலுவலகங்களிலும் தமிழரைப் பொறுத்தமட்டில் உள்ளது. இந்நிலைமாற நாம்தான் போராட வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தமது ஆட்சேபனையை தணிக்கை சபைககு தெரிவிக்க வேண்டும் உங்கள் செய்தியில் நீங்கள் காட்டிய விளக்கமும் தணிக்கை சபையை கண்டித்த திறைமைக்கும் உங்களை பாராட்டவே இக் கடிதம் எழுதுகின்றேன்.

மா. செ. தெய்வேந்திரம்<br>யாழ்ப்பாணம்.

---

## 'கிளிநொச்சி குறைகளை தீர்த்துவிட்டேன்'

அல்லைப்பிட்டி, புதன்

"ஓர் ஆட்சிமன்ற அங்கத்தவரின் கடமை அவருடைய தொகுதி மக்களின் குறைகளை நன்குணர்ந்து அவற்றைப் பூர்த்தியாக்குவதே கிளிநொச்சித் தொகுதினுடைய தேவைகள்யாவற்றையும் பூர்த்தியாக்கிவிட்டேன் என்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்'' என கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் புளியங்கூடலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்,

மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆர்வமும் எடுத்தபணியை முடிப்பதற்கு தொடர்ந்து பணியாற்றும் உறுதியுமே இதற்குக் காரணமென அவர் மேலும் சொன்னுர். இக் கூட்டத்திற்கு செ சிற்றம்பலம் தலைமை வகித்தார்,

---

### எச்சரிக்கை

திருக்கோணமலை, புதன்

திருமலை நகரசபையினுல் தனக்குத்தரப்பட்ட பதவியுயர்வைத்தடைசெய்துவிட்ட சங்கத்தலைவருக்கு எதிராகவும் தனது உரிமைகளைப் பெறும் முகமாகவும் நகரசபைப் பணிமனையில் கடமையாற்றும் திரு நாமத்தியூஸ் என்பவர் எதிர்வரும் ஜனவரி 2-ந் திகதி நகரசபை முன்றதில் சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்

---

## நீண்டகால கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்.மாநகரசபை 10-ம் வட்டாரத்தில் வசிக்கும் வரியிறுப்பாளர்கள் பலமுறை யாழ் மாநகரசபையிடம், வண்ணுர ஒழுங்கையென அழைக்கப்பட்டுவரும் ஒழுங்கையின் பெயரை டி.ஆர். ஓ. ஒழுங்கையென மாற்றும்படி கோரியும் இதுவரை இந்தப்பெயரை மாற்றுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைவான நடவடிக்கை எடுப்பார்களா?

10-ம் வட்டார<br>**வரியிறுப்பாளன்.**

---

யாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது, பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு கே, தியாகலிங்கம் கௌரவ காரியதரிசி திரு இராலோகநாதன், தனுதிகாரி திரு ஏ வெற்றிவேலு நிர்வாகசபைஒன்றும் அமைக்கப்பட்டது.

— —

## அபராதமும் பொருட்களும் பறிமுதல்

இமையாணன், திங்கள்

இரகசியத்தகவலைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை பொலிசார் 68 பாக்கு மூடைகளையும் இரண்டுகட்டு மரங்களையும் வல்வெட்டித்துறை சுங்க இலாகாவுக்கு அண்மையில் கைப்பற்றினர்.

பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எல் சிறீவர்த்தனு தலைமையிலான பொலிஸ் கோஷ்டிஒன்று பாக்கு மூடைகளையும் கட்டுமரங்களையும் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்து பொருட்களுடன் வல்வெட்டித்துறை சுங்கஇலாகாவில் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாண சுங்க இலாகாவின் உதவிக் கலக்டர் முன்னிலையில் வல்வெட்டித்துறை சுங்க இலாகாவில் விசாரணை நடைபெற்றபோது இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டு பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

—

லைசென்ஸ் இல்லை

## 160 பேர் அகப்பட்டனர்

யாழ்ப்பாணம், வியா

சைக்கிள் லைசென்ஸ் இல்லாத 160 பேர் யாழ்ப்பாணம் மாநகரசபை இறைவரி உத்தியோகத்தர்களிடம் அகப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகரில் நடாத்திய திடீர் சோதனையினுலேயே 160 பேரும் அகப்பட நேர்ந்தது ஒவ்வொருவரிடமிருந்தும் தலா ஒரு ரூபாபத்துச் சதம் அறவிடப்பட்டது (கா நி)

---

### விற்பனை

CN 6695 ஏ 40 கார் விற்பனைக்குண்டு நேரில் 26-ம் 27-ம் 28-ம் திகதியில் அலுவலக நேரங்களில் ஏ. எம். சந்திரரத்தினு, கச்சேரி, யாழ்ப்பாணத்திலும் மற்றைய நேரங்களில் 78, கண்டி வீதி, சுண்டிக்குழியிலும் பார்வையிடலாம். 1621

---

களவே தொடர்ந்து காட்சியளித்துக் கொண்டிருந்த அந்தப் பெரும் ஜோதி, வான சாஸ்திரிகளாதலால் அதன் தோற்றம் உலகுக்கு ஏதோ ஒரு பெரிய நன்மையைக் குறிக்கிறது என்று அவர்கள்கணித்துக்கொண்டு அது காட்டிய வழியேபெத்லஹமுக்குச் சென்று, இயேசு பாலகனைத் தரிசிதது அவருக்கு பொன்னையும் சாம்பிராணி முதலிய வாசனைத் திரவியங்களையும் காணிக்கை செலுத்தினுர்கள்.

அவர்கள் கண்டது சுக்கிரன் (வெள்ளி) என்ற கிரகத்தையே என்ற அபிப்பிராயம் பல காலமாகஇருந்து வந்தது. வானத்தில் சூரிய சந்திரரைத் தவிர அதிகமான பிரக சத்தை தருவது சுக்கிரனே. வருடத்தில் சில மாதங்களுக்குசூரியோதயத்துக்கு முன் கிழக்கு வானில் தோன்றும் சுக்கிரன் என்ற 'விடிவெள்ளி' உண்மையில் ஓர்அழகான காட்சியாகும் விசாலமான வனுந்தரங்களிலும் பரந்த சமுத்திரங்களிலும் பிரயாணம் செய்வோருக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாக நின்று வழிகாட்டும். பாரசீகம், அராபியா, இந்தியா முதலிய கிழத் தேசங்களில் வசிப்பவர்களுக்கு இது சர்வ சாதாரணமான ஒரு காட்சி, ஆகையால் 'மாஜி'கள் சுக்கிரனைக்கண்டுதான் அதற்கு பெரியதோர் புதுமையை கற்பித்தார்கள் என்று நினைக்க முடியாது.

பல வருடங்களுக்கொரு முறை கிரகச் சேர்க்கை ஏற்படுவதுண்டு. நமது ஊனக் கண்ணுக்கு புலப்படக்கூடிய சுக்கிரன், வியாழன், செவ்வாய், சனி ஆகிய கிரகங்களில் ஏதாவது இரண்டோ, மூன்றே ஒரே ராசியில் மறுபடியும் சேர்த்துக் கொண்டது.

பிபிலியத்தில் கூறப்பட்டுள்ள இச்சம்பவங்கள் ஒரு தூமகேதுவின் விஜயத்தையே குறிக்கின்றன. ஆனுல் இயேசுநாதர் பிறந்தபோது இப்படி ஒன்றும் நடக்கவில்லை. அன்றியும் தூமகேதுவுக்கு நீண்டதோர் வால் இருக்கும். பெத்லஹமில் தோற்றப்பட்டதோ ஒரே ஒரு பிரகாசமான நட்சத்திரம்.

சமீபகால வானசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கும் ஒரு விஷயம் சற்றே பொருத்தமானதாயிருக்கிறது. ஊனக்கண்ணுக்கெட்டாத வெகு தூரத்தில் 'நோவாய்' என்று சொல்லப்படும் புதிய நட்சத்திரங்கள் இருக்கின்றன, இவை சில சமயங்களில் பிளந்து வெடித்து, ஆயிரம் அணுக்குண்டுகள் வெடித்தாற் போன்ற ஒளியை பல நாட்களுக்கு பரப்பிக் கொண்டிருக்கும். இன்றைய விஞ்ஞானிகள் மிகச் சக்திவாய்ந்த பூதக் கண்ணுடிகள் மூலம் ஒவ்வொரு வருடமும் இதை அவதானித்து வருகிருர்கள் கிறிஸ்துவுக்குப்பின் 1054-ம் ஆண்டிலும் 1572இலும் 1604 இலும் இப் பிரபஞ்ச விநோதம் நிகழ்ந்ததாக ஆதாரபூர்வமான அத்தாட்சிகள் உள்ளன:

இவை எல்லாவற்றையும் பார்க்குமிடத்தில் பெத்லஹமில் தோன்றிய ஜோதி ஒரு கிரகமுமல்ல, கிரகச் சேர்க்கையுமல்ல, வால் நட்சத்திரமுமல்ல: ஒரு நட்சத்திரப் பிளவையே என்று ஊகிப்பதற்கு இடமிருக்கிறது.

**—வழிப்போக்கன்**

---

## "ஏனைய மாகாணத்திலும் போராடத் தயார்"

### ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சுருட்டுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்த நிலைமையை ஆராயும் நோக்கமாக நேற்று முன்தினம் கூடிய அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கக் காரியக் கமிட்டி வேலைநிறுத்தம் முடிவடையும் தறுவாயில் அகில இலங்கையிலுமுள்ள சகல தொழிலாளர்களுக்கும் ஒரு வேண்டுகோளை விடுத்தது

வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் அதாவது வடமாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள சுருட்டுத் தொழிலாளர்கள், மேற்படி சங்கத்தின் தீர்மானத்தின்படி ஆயிரம் சுருட்டுக்கு முன்னிருந்த சம்பளமாகிய 13 ரூபாயை விட 2 ரூபாய் கூட்டி 15 ரூபாயாகப் பெறவேண்டுமெனவும், இதற்கு மாருகவோ தடையாகவோ முதலாளிகள் இருந்தால் எமது சங்கத்திற்கு உடன் அறிவிக்க வேண்டுமெனவும், உடன் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org